# பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு - இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

காலைக் கதிரவனின் கண்கள் பூமியை நோக்க, காணாமல் போகும் பனித்துளிப் போல, இறைவன் நம்மை இனிதே நோக்க இன்னல்கள் பறக்கும் என்ற நம்பிக்கையோடு இறைபாதம் வந்திருக்கும் அன்புள்ளங்களை பொதுக்காலம் 4ஆம் ஞாயிறு திருப்பலிக்கு வருக என வரவேற்கிறோம்.

இயேசு தன் வல்லமையால் செல்லும் இடமெல்லாம் நன்மை செய்து கொண்டே சென்றார். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற, மைந்தன் சிலுவையையே ஏற்றுக்கொண்டார்.

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினனைத் தேர்ந்தெடுத்து, என் வார்த்தைகளை அவன் வாயில் வைப்பேன். அவனை வல்லமையாக்குவேன் என்கிறார் இறைவன். இறைக்கட்டளையில்லாமல் தானாக பேசும் போலி இறைவாக்கினனை வேரறுப்பேன் என்கிறார். இதை உணர்ந்து கொள்ளாத மக்கள் அன்று மட்டுமல்ல. இன்றும் இருக்கிறார்கள். அமைதியான வழிபாட்டில் இறைவன் இல்லை என்றும் புரியாத பாஷைகளை பேசுவோரிடமும் மொழிகளை அடுக்குகளாக்கி பேசுபவரின் வாயில் வெளிப்படுபவை தான் இறைவார்த்தை என்று புத்தியை அடகு வைத்து விட்டு அறிவைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் “நீங்கள் கவலையற்றவராய் இருங்கள் ” என்று பவுல் கூறுகிறார். கவலை மட்டுமே வாழ்க்கை கிடையாது. “சிமிட்டும் நம் இமைகள் ஒரு நொடி இருட்டினால் தான் நம்மால் பல நொடி வெளிச்சத்தினால் வாழ முடியும்” என்பது கவிஞன் ஒருவனின் கை வண்ணம். கருணையுள்ள இறைவன் நம் கவலைகளை காற்றில் கற்பூரமாய் கரைந்திடச்

செய்வார் என்ற நம்பிக்கையை நங்கூரமாக்குவோம். நான் எனது குடும்பம் என்று நமது வாழ்க்கை வட்டத்தை சுருக்குகின்றோம். 24மணி நேரம் தந்த இறைவனுக்கு சில மணித்துகள் ஒதுக்குவதை மறக்கின்றோம். காலையில் மலர்ந்து மாலையில் உதிரும் பூ போன்றது மனித வாழ்க்கை. இக்குறுகிய காலத்தில் மலரின் மணத்தை உணருவோம். முட்கள் குத்திடலாம். மலரின் மணம் அதை மறக்கச் செய்யட்டும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைவன் தீய ஆவியை விரட்டுகிறார். தீய ஆவியைத் தாங்கிய மனிதன் கூட, "நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று இயேசுவை மகிமைப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ள நாம், பல ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ள நாம் இறைவன் எவ்வளவாய் மகிமைப்படுத்த வேண்டும்?

"இந்த உலகம் நீ நன்மை செய்யும் போது உன்னை கவனிக்காது. தீமை செய்யும் போது உன்னை விமர்சிக்காமல் இருக்காது" என்கிறது ஓர் கவிதை. தீய ஆவியை விரட்டிய இயேசுவையே பெயல்செபூலை தலைவனாகக் கொண்டு பேயை விரட்டுகிறார் என்று விமர்சிக்கிறது ஒரு கூட்டம். தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இயேசுவை ஏற்றுக் கொள்ளத் தயங்கியது மறைநூல் அறிஞர்களின் கடின இதயம். நாமும் இறைவனைக் கண்டுகொள்ளத் தடையாக இருப்பது நமது கடின இதயம் தான். நாம் நம் கடினத்தை உடைத்து இதயத்தை இனிமையாக்கி, மனதை மென்மையாக்கி இறைவனைக் காண்போம். "கால்கள் ஈரமாகாமல் கூட கடலைக் கடக்கலாம் - ஆனால் விழிகள் ஈரமாகாமல் வாழ்வைக் கடக்க இயலாது". கவலையை மனக் கடலில் கரைப்போம். விழிகளில் இறைவனைச் சுமப்போம். மனங்களில் மகிழ்ச்சியை பெருக்குவோம் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. நல் மேய்ப்பரே எம் இறைவா!

இறைப்பணிக்காக நீர் அழைத்த எம் திருச்சபைத் தலைவர்கள், ஆயர்கள், குருக்கல், துறவறத்தார் ஆகியோரை உமது வல்லமையைப் பொழிந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தீய சக்திகளை விரட்டும் வல்லமையானவரே!

எங்கள் பகுதியில் மக்கள் மத்தியில் ஓங்கியிருக்கும் மூட பழக்கவழக்கங்களை அறிவின் கண் கொண்டு நோக்கவும், தீய சக்திகளுக்கு அடிமையாக இருப்பவர்களை உமது கருணையால் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் ஊற்றே இறைவா!

எம் பகுதியில் போதிய மழையைத் தந்து விவசாயம் சிறக்கவும், அதை நம்பி வாழும் மக்களின் பொருளாதாரம் மேம்படவும், படிக்கும் குழந்தைகள் சிறந்த ஞானம் பெறவும், வேலை வாய்ப்புக்காக காத்திருப்போர் தகுதிக்கேற்ற வேலை பெற்றிடவும் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் வல்லவரே எம் இறைவா!

தீராத நோய்களினால் வேதனையுற்று வருந்துவோருக்கு உம் வல்லமையை பொழிந்திடவும், மனக்கவலையால் வருந்துவோருக்கு ஆறுதலும் சுகமும் தந்து, புது வாழ்வு தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660;

www.arulvakku.com